Crl.Misc.39

# D E P O S I T I O N   O F   W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.38/2016

**P.W**.4 (LW5)

| | |
|---|---|
| Name | : திருமதி.ஞானசுந்தரி |
| Father/Husband Name | : திரு.வீராசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மணமை கிராமத்தில் வசித்து பி.டி.ஓ. அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சரோஜா என்னுடைய தாயார் ஆவார்.

2. கடந்த 21.02.2016 அன்று மாலை 6 மணியளவில் எனது தாயார் ஒரு டீ கடைக்கு பால் வாங்க சென்றிருந்தபோது தாழம்பேடு டீ கடையில் துலுக்கானத்தம்மன் கோயில் தெருவில் காத்தவராயன் என்பவர் என் தாயாரை பார்த்து எலக்சன் சமயத்தில் அவரை வீட்டை விட்டு வெளியே போக சொன்னீர்களே எப்போது தனியாக மாட்டுவீர்கள் என்று நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இன்று தான் தனியாக சிக்கினீர்கள் என்று கூறி வாடி போடி என்றும் அசிங்கமாக தேவிடியா என்றும் பேசி எனது தாயாரின் துணியை பிடித்து இழுத்தார். அருகில் இருந்த டீ கடை உரிமையாளர் ஜெயவேல் மற்றும் அருகில் இருந்த எனது தங்கை செல்வகுமாரி அவரது வீட்டில் இருந்து வந்து எனது அம்மாவை அங்கிருந்து அழைத்துச் சென்றார். காத்தவராயன் எனது அம்மாவை

பார்த்து தனியாக இன்னொரு முறை சிக்கினால் உன்னை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். இது குறித்து எனக்கு எனது அம்மா ஒரு வாரம் கழித்து தகவல் சொன்னார். நான் அவரை இந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு அறிவுரை கூறினேன். பிறகு கடந்த 07.03.2016 அன்று நானும் எனது அம்மாவும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

போலிசார் என்னை எங்கே வைத்து விசாரித்தார்கள் என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் அம்மாவை தான் விசாரணை செய்தார்கள். நான் என் அம்மாவுடன் இருந்தேன். என் அம்மாவின் வீடு சம்பவம் நடந்த அதே ஊரில் தான் இருக்கிறது என்றால் சரிதான். என் அம்மாவின் வீட்டிலிருந்து காவல் நிலையம் சுமார் 5 கி.மீ. தூரம் இருக்கும். என் அம்மாவிற்கும் காத்தவராயனுக்கும் ஏற்கனவே தேர்தல் சம்மந்தமாக பிரச்னை இருந்தது என்றால் தேர்தல் சமயத்தில் எனது அம்மா காத்தவராயனை வீட்டிலிருந்து வெளியே செல்லுமாறு கூறியதாக என்னிடம் சொன்னார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் டீ கடைக்கு அருகே நிறைய வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன். தேர்தல் முன்விரோதம் காரணமாக என் தாயார் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.